‘இனி வரும் காலம் கணினிக் காலம்’ என்பதை உணர்ந்தே, தகவல் தொழில்நுட்பப் பூங்காக்களை உருவாக்கினார், கலைஞர்!

‘உலகம் உங்கள் கையில்’ நிகழ்ச்சியில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை! முதல் பக்கத் தொடர்ச்சி

விண்வெளியில் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கின்ற அளவுக்குச் சாதனைகள் படைத்துக் கொண்டிருக்க முடியுமா? நிச்சயம் முடியாது! மனிதர்களுக்கு காலம் கொடுத்திருக்கின்ற இரண்டாவது நெருப்புதான், A.I. அதை சரியாகப் பயன்படுத்திக் கொள்ளத்தான் இன்றைக்கு உங்கள் கைகளில் லேப்டாப் வழங்கியிருக்கிறோம்!

என்னைப் பொறுத்தவரைக்கும், என்னுடைய எண்ணம் எல்லாம் என்ன தெரியுமா, நீங்கள் என்ன படிக்கிறீர்கள், எத்தனை டிகிரி வாங்குகிறீர்கள்? என்ன வேலைகளில், எவ்வளவு பெரிய உயர்பொறுப்புகளில் இருக்கிறீர்கள்? சக்சஸ்ஃபுல்லாக, சொந்தமாக தொழில் நடத்துகிறீர்களா, உங்களால் எத்தனை பேருக்கு வேலை வழங்க முடிகிறது, உங்களுடைய வளர்ச்சியால் நீங்கள் இந்தச் சமுதாயத்திற்கு என்ன செய்வீர்கள்? என்ற எண்ணம்தான் எனது நெஞ்சில் மேலோங்கி நிற்கிறது. சுருக்கமாகச் சொல்ல வேண்டும் என்றால், இன்றைக்கு இருக்கின்ற இளைய சமுதாயம், மதிப்புமிக்க மனிதர்களாக, பெருமைமிக்க மனிதர்களாக, உயர்ந்து நிற்க வேண்டும்! எல்லோரையும் வாழ வைக்க வேண்டும்! இதுதான் இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலினின் எண்ணம்!

இன்றைக்கு உங்கள் கைகளுக்கு வந்திருக்கின்ற லேப்டாப், பரிசுப் பொருள் கிடையாது; உலகத்தை நீங்கள் ஆளுவதற்காக உங்கள் கைகளுக்கு வந்திருக்கக்கூடிய வாய்ப்பு! எங்களைப் பொறுத்தவரை, இது செலவுத் திட்டம் கிடையாது; எதிர்காலத் தலைமுறையின் கல்வியில் செய்யப்படும் முதலீடு! நீங்கள் படிப்பதற்கான அனைத்து வாய்ப்புகளையும் உருவாக்கித் தருகிறோம். படித்து, உங்கள் எதிர்காலத்தை, வாழ்க்கைப் பாதையை, நல்ல பாதையாகத் தேர்ந்தெடுங்கள்!

களத்தில் நிலைத்து நிற்க – தொழில்நுட்ப அறிவு அவசியம்!

3 ஆண்டுகள் - 4 ஆண்டுகள் படிக்கின்ற டிகிரி மட்டுமே போதும் என்று நினைத்துவிடக் கூடாது. அனைத்துத் துறைகளிலும் தினமும் நிறைய வளர்ச்சிகள் வந்து கொண்டே இருக்கின்றன. அதனால், டிகிரி படிப்பதோடு, அப்கிரேட் ஆகின்ற டெக்னாலஜிக்கு ஏற்றது போல, நீங்கள் அப்டேட் ஆகிக் கொண்டே இருக்க வேண்டும்!

இனிமேல், டெக்னாலஜியைப் படிப்பது என்பது ஆப்ஷன் கிடையாது; உங்கள் ஃபீல்டில் நீங்கள் நிலைத்து நிற்பதற்கு அவசியமாக இருக்கிறது! தொழில்நுட்பம் அனைத்துத் துறைகளிலும் நுழைந்துவிட்டது! எல்லாவற்றுக்கும் மேலாக எல்லோருடைய கைகளுக்கும் அது வந்துவிட்டது! அதை முறையாகப் பயன்படுத்தி நாம் முன்னேற வேண்டும். ஆனால் நான் ஒன்று சொல்கிறேன் - ஏ.ஐ.-ஆல் ஒரு போதும் மனிதர்களை நாம் ரீ-பிளேஸ் செய்ய முடியாது! நம்முடைய வேலைகளை இன்னும் விரைவாகச் செய்வதற்கும், இன்னும் சிறப்பாகச் செய்வதற்கும் தான் ஏ.ஐ. துணை நிற்கும்! ஸ்கில் அடிப்படையிலான வேலைவாய்ப்புகள் நிறைய உருவாகியிருக்கிறது! அதையெல்லாம் நீங்கள் பயன்படுத்திக் கொண்டு முன்னேற வேண்டும்!

சென்ற ஜெனரேஷன் இளைஞர்கள், அறிவுக்காக, பல புத்தகங்களைத் தேடி அலைய வேண்டும். ஆனால், இப்போது உங்களுக்குத் தேவையான தகவல்களை, அறிவை, நீங்கள் எப்போது வேண்டுமானாலும் இருந்த இடத்தில் இருந்து கொண்டும் அதை நீங்கள் பெறலாம்! இந்த வளர்ச்சியைக் குறைசொல்லி முடங்கிப் போவது முட்டாள்களுடைய பாதை! இதைப் பயன்படுத்தி வாழ்க்கையின் உச்சத்தைத் தொட வேண்டியதுதான் உங்களுடைய வேலை!

இன்றைக்கு உங்கள் கைகளில் வந்திருக்கின்ற லேப்டாப்பை - வெறுமனே படம் பார்க்க, கேம்ஸ் விளையாட, பயன்படுத்திக் கொள்ளப் போகிறீர்களா? இல்லை, உங்கள் கரியருக்கான லாஞ்ச்-பேட்-ஆக பயன்படுத்திக் கொள்ள போகிறீர்களா? இதுதான் நாங்கள் உங்கள் முன்னால் வைக்கக்கூடிய கேள்வி! எல்லாவற்றுக்குமே நல்லது, கெட்டது என்று இரண்டு பக்கங்கள் இருக்கின்றன. அதில் நீங்கள் எந்தப் பக்கத்தைத் தேர்ந்தெடுக்கிறீர்களோ, அதைப் பொறுத்துதான் வெற்றி உங்கள் பக்கம் வரும்! நான் சொல்வதெல்லாம், உங்கள் கரியர் எதுவாக இருந்தாலும், அதில் நீங்கள்தான் டாப் பொசிஷனில் இருக்கவேண்டும்! வேறு ஏதாவது சந்தர்ப்பத்தில், நாம் சந்திப்பதற்கு வாய்ப்பு கிடைக்கும்போது, உங்களுடைய வெற்றியைச் சொல்லி, நீங்கள் மகிழ்ச்சி அடைய வேண்டும்; அதில்தான் நான் பெருமைப்பட வேண்டும்!

உலகத்தோடு போட்டி போடுங்கள்.. அந்தப் போட்டியில் வெற்றி பெறுவதற்கான கருவியைத்தான், இன்றைக்கு உங்கள் கைகளில் வழங்கியிருக்கிறோம்!

வெற்றி உங்களுக்காகக் காத்திருக்கிறது. நான் எப்போதும் சொல்வதுதான் - நீங்கள் எதைப்பற்றியும் கவலைப்படாதீர்கள். படியுங்கள், படியுங்கள், படியுங்கள். உங்களைப் பார்த்துக் கொள்வதற்கு நான் இருக்கிறேன். உங்கள் குடும்பத்தைப் பார்த்துக் கொள்வதற்கு நம்முடைய திராவிட மாடல் அரசு இருக்கிறது. பணம் தேவைப்படுகின்ற உங்கள் அம்மாக்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் உரிமைத் தொகை தருகிறோம். படிப்பதற்குத் தேவையென்றால் மாணவர்களுக்கு மாதம் ஆயிரம் ரூபாய். மாணவிகளுக்கு ஆயிரம் ரூபாய். பொங்கல் கொண்டாடுவதற்கு மூவாயிரம் ரூபாய் வழங்குகிறோம். பசியோடு காலையில் பள்ளிகளுக்கு வருகின்ற குழந்தைகளுக்கு காலை உணவு தருகிறோம். வேலை கிடைப்பதற்கு உலக அளவில் சென்று தொழிற்சாலைகளைக் கொண்டு வருகிறோம். மொத்தமாகச் சொல்ல வேண்டும் என்றால், பொருளாதாரத்தைப் பாருங்கள்! இரட்டை இலக்க வளர்ச்சியைக் கொண்டு வந்திருக்கிறோம்.

அதனால்தான், இங்கே இருக்கக் கூடிய உங்களை எல்லாம் நான் கேட்டுக் கொள்ள விரும்புவது, உலகப் பத்திரிகையே நம்முடைய தமிழ் நாட்டை இன்றைக்கு சூப்பர் ஸ்டார் ஸ்டேட் என்று சொல்கிறார்கள். இது எல்லாம் போதுமா! சொல்லுங்கள் போதுமா! (“போதாது” என மாணவ - மாணவியர் பலத்த குரல் எழுப்பினர்) கண்டிப்பாகப் போதாது! இன்னும் வளர்ச்சி வேண்டும். தமிழ்நாடு உங்களை நம்பித்தான் இருக்கிறது. உலகம் உங்கள் கையில் இருக்கிறது. ஜெயித்துவிட்டு வாருங்கள். நீங்களும் ஜெயித்து வாருங்கள். நாங்களும் ஜெயித்துவிட்டு வருகிறோம். எப்போதுமே உங்கள் கூடவே இருப்போம்! தமிழ்நாடு வெல்லட்டும்!

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

ஆவடி தொகுதி – நெமிலிச்சேரி சந்திப்பில்

ரூ.35 இலட்சம் மதிப்பீட்டில் ரவுண்டானா பணிகள்!

அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார்!

திருவள்ளூர் ஜன. 06- திருவள்ளூர் மாவட்டம் பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியம் நெமிலிச்சேரி ஊராட்சியில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை சார்பில் தனியார் நிறுவனங்களின் சுற்றுச்சூழல் பாதுகாப்பு நிதி திட்டத்தின் கீழ் நெமிலிச்சேரி சந்திப்பில் ரூ.35 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்படவுள்ள ரவுண்டானா பணிகளை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் அடிக்கல் வைத்து பணிகளை துவக்கி வைத்தார்.

அப்போது சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் கூறியதாவது

பூவிருந்தவல்லி ஊராட்சி ஒன்றியம் நெமிலிச்சேரி ஊராட்சி பகுதியிலுள்ள வண்டலூர்-மீஞ்சூர் மற்றும் ஆவடி-திருவள்ளூர் சாலை சந்திப்பில் உள்ள பகுதியில் போக்குவரத்து சீரமைப்பு வட்ட சந்திப்பாக உள்ளது. இப்பணியில் பசுமையாக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்படவுள்ளது. இயற்கை மேம்படுத்தும் நாட்டு மரங்கள் உள்ளிட்ட மர வகைகள், நீரூற்றுகள், பசுமைக்கான முன் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு “பசுமை தமிழகம்” இயக்கத்தின் முயற்சிகளில் ஒன்றாக சமூக பொறுப்புணர்வு சூழல் நிதியின் (Corporate Environmental Responsibility) கீழ் மேற்கொள்ளப்படுகிறது. மேலும், இப்பசுமை முயற்சிகள் பொது மக்களுக்கு இயற்கை, சுற்றுச்சுழல் குறித்த விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் தாவர வகைகள் அவற்றின் கரியமில வாயு உறிஞ்சுதிறன், அழகுணர்ச்சி வெளிப்படுத்தும் வண்ணமயமான பூக்கள் பூக்கும் மரம் மற்றும் செடி வகைகளுடன் இந்த வட்ட சந்திப்பு உருவாக திட்டமிடப்பட்டுள்ளது என அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கூறினார்.

இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை இணை இயக்குநர்/திட்ட இயக்குநர் வை.ஜெயகுமார், செயற்பொறியாளர் ஊரக வளர்ச்சி தணிகாசலம், உதவி செயற்பொறியாளர் மாரிச்செல்வம்;, பூவிருந்தவல்லி வட்டார வளர்ச்சி அலுவலர்கள் மகேஷ்பாபு அமிழ்தமன்னன் ஆவடி வட்டாட்சியர் கண்ணன், மாவட்ட அவைத் தலைவர் ம.இராஜி, ஒன்றிய செயலாளர்கள் டி.தேசிங்கு, சே.பிரேம் ஆனந்த், ப.ச.கமலேஷ், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கே.சுரேஷ் குமார், ஒன்றிய நிர்வாகிகள் ப.கந்தன், எம்.குணசேகரன், ஜெ.சாக்ரடீஸ், ஒன்றிய கவுன்சிலர் நெமிலி சுரேஷ் குமார், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் கு.தமிழ்செல்வி, திமுக நிர்வாகிகள் கு.சேகர், வாசுகி எட்வின், இ.வி.பி.பிரதீப், வழக்கறிஞர் பொன்.புனிதவராஜன், சதீஷ் குமார், துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.

தமிழ் வளர்ச்சிக் கழகம் சார்பில்

நாடகவியல் களஞ்சியம் நூல் வெளியீட்டு விழா!

ப.சிதம்பரம் - கோவி.செழியன் சிறப்புரை! முனைவர் ம.இராசேந்திரன் வரவேற்புரை!

சென்னை, ஜன. 6- தமிழ் வளர்ச்சிக் கழகம் சார்பில் நாடகவியல் களஞ்சியம் நூல் வெளியீட்டு விழா 8.1.2026 வியாழக் கிழமை மாலை 3:30 மணி அளவில் சேப்பாக்கம், சென்னை பல்கலைக்கழக வளாகம் அறை எண் எப். 50 ல் நடைபெறுகிறது.

விழாவிற்கு தமிழ் வளர்ச்சிக் கழகத் தலைவர் முனைவர் ம.ராசேந்திரன் வரவேற்புரையாற்றுகிறார்.

முன்னாள் ஒன்றிய நிதி அமைச்சரும் தமிழ் வளர்ச்சிக் கழக அறங்காவல் குழுத் தலைவருமான ப.சிதம்பரம் எம்.பி. கலந்து கொண்டு தலைமை உரையாற்றுகிறார்.

துணைவேந்தர் பொறுப்புக் குழு உறுப்பினர் முனைவர் எஸ்.ஆம்ஸ்ட்ராங் முன்னிலை வகிக்கிறார்.

இவ்விழாவில் உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் கலந்து கொண்டு நூல் வெளியிட்டு சிறப்புரை யாற்றுகிறார்.

நூலின் முதற்படியை சிறை திரைப்பட இயக்குனர் சுரேஷ் ராஜகுமாரி, சென்னை பல்கலைக் கழக பதிவாளர், தமிழ் வளர்ச்சிக் கழக ஆட்சிக் குழு உறுப்பினர் முனைவர் ரீட்டா ஜான் ஆகியோர் பெற்றுக்கொண்டு வாழ்த்துரை வழங்குகின்றனர்.

ரூபாய் 750 விலையுள்ள நாடகவியல் களஞ்சியம், வெளியீட்டு விழாவில் மட்டும் ரூ.500க்குக் கிடைக்கும்.

விழாவில் தமிழ் வளர்ச்சிக் கழக அறங்காவல் குழு, ஆட்சிக் குழு, பொது குழு உறுப்பினர்கள் கலந்து கொள்கின்றனர்.

நிறைவாக நூலாசிரியர் முனைவர் மு.இராமசுவாமி நன்றி கூறுகிறார்.

தியாகராயர் நகர் கிழக்குப் பகுதி

131 வது வட்டத்தில் திராவிட பொங்கல் விழா!

வட்டச் செயலாளர் மு.ம.செந்தில்குமார் அறிவிப்பு!

சென்னை, ஜன.6- முதலமைச்சர் கழகத் தலைவர் அவர்கள் மற்றும் துணை முதலமைச்சர் கழக இளைஞரணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரது வேண்டுகோளை ஏற்று சென்னை தென்மேற்கு மாவட்டம் தியாகராயர்நகர் கிழக்கு பகுதி 131வது வட்டத்தில் திராவிட பொங்கள் விழா இன்று (06.01.2026 செவ்வாய்கிழமை மாலை 6.00 மணிக்கு நடைபெறுகிறழ்ச்சியில் தியாகராய நகர் சட்டமன்ற உறுப்பினர் கிழக்கு பகுதி கழக செயலாளர் ஜெ.கருணாதிதி கலந்து கொண்டு கழகத்தினர் 500 பேருக்கு புத்தாடை மற்றும் பொங்கம் பரிசு வழங்குகிறார்.

மேலும் இந்த நிகழ்ச்சியில் மேற்கு பகுதி ழசெயலாளர்கஏமூமலை, தியாகராயர்நகர் கிழக்கு பகுதி அவை தலைவர் மு.மணிவண்ணன் மாமன்ற உறுப்பினர் கோமதி மணிவண்ணன், யாரார் தொகுதி பார்வையாளர் ரத்னா கோகேஷ்வரன் ஆகியோர் கலந்து கொள்கிறார்கள் மற்றும் மாட்டகழ+ நிர்வாகிகள், பருதி கழக நிர்வாக, வட்ட கழக நிர்வாக்கள் மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள், துணை அளம்ப்பாளர்கள், கழக முந்த முன்னோடிகள் கலந்து கொள்கிறார்கள் என்று வட்டச் செயலம். செந்கில் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

சென்னை தென் மேற்கு மாவட்ட கழக இளைஞர் அணி மாவட்ட-பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக்கூட்டம்!

மாவட்டச் செயலாளர் மயிலை த.வேலு எம்.எல்.ஏ. அறிவிப்பு!

சென்னை தென்மேற்கு மாவட்ட கழக இளைஞர் அணி மாவட்ட பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் ஆலோசனைக்கூட்டம் இன்று (06.01.2026) செவ்வாய்க்கிழமை இன்று காலை 10.00 மணியளவில் சி.பி.ராமசாமி சாலையில் உள்ள அலுவலகத்தில் எனது தலைமையில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் பகுதிசெயலாளர்கள், வட்டச்செயலாளர்கள் இளைஞர் அணி மாவட்ட, பகுதி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், தவறாமல் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுகொள்கிறேன்.

பொருள் : இளைஞர் அணி மன்றம் அமைத்தல், கழக ஆக்கப்பணிகள் குறித்து.

மயிலை த.வேலு எம்.எல்.ஏ.
செயலாளர், சென்னை தென்மேற்கு மாவட்ட தி.மு.க.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

அய்யா ப.தமிழரசன்
சனவரி 6 (2007)

தனது இளமைப் பருவத்திலேயே கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டு பணியாற்றியவர்.

மன்னார்குடி நகரக் கழகக் செயலாளராக பொறுப்பு வகித்து, அப்பகுதியில் கழகம் வளர்த்தவர்.

விவசாயிகள் உரிமை காத்திட தலைமைக் கழகம் அறிவித்த போராட்டத்தில் கலந்து கொண்டு அ.தி.மு.க. அரசின் காவல் துறை நடத்திய துப்பாக்கிச் சூட்டில் நெஞ்சில் குண்டடிப்பட்டு உயிர் மீண்டவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் “அஞ்சாநெஞ்சன்” என்று பாராட்டப் பட்டவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

நெல்லை புகாரி
சனவரி 6 (1999)

கழகத்தின் தொடக்க நாள் முதலாக அறிஞர் அண்ணா அவர்கள் வழிகாட்டுதலையேற்று, தி.மு.க.வின் கொள்கையில் உறுதி கொண்டு, தமிழ்நாட்டின் ஊர்கள்தோறும் கழக மேடைகளில் கொள்கை பரப்பும் முழக்கம் செய்தவர்.

தலைவர் கலைஞர் அவர்களின் அன்பைப் பெற்றவர்.

கழகத்தின் அறப்போராட்டங்கள் பலவற்றிலும் ஈடுபட்டு சிறை சென்றது மட்டுமின்றி, மிசா கைதியாக சிறையில் இருந்தவர்.

“சிறுபான்மையினரான இசுலாமியர்கள் பெரும்பான்மையினருடன் இணக்கமாக வாழ்வதற்கான வழிகாண்பது தி.மு.கழகம்” என்பதில் உறுதி பூண்டு அயராது பணியாற்றியவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.